isharaiz.com

# மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

01. மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் **2026 ஆம் ஆண்டு டிசம்பர்** மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது

இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Applications – Recruitment Exam/E.B. Exams" இடைமுகப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன். விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை ஊடாக (Online) மாத்திரமே சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2026.10.16** ஆகும்.

**குறிப்பு :** நிகழ்நிலை ஊடாக விண்ணப்பங்கள் 2026 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் 2026 ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

**கவனத்திற்கு :** இப்பரீட்சையானது ஒருங்கிணைந்த அரச சேவையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையுடன் இணைக்கப்பட்டு ஒரே பரீட்சையாக நடாத்தப்படும் என்பதுடன், இரு சேவைகளுக்கும் தகுதிபெறும் விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப யாதேனும் ஒரு சேவையைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

இப்பரீட்சையானது அட்டவணை - II இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரமே நடாத்தப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் அந்த அட்டவணைக்கு அமைவாகத் தாம் பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் நகரத்தைத் தெரிவு செய்தல் வேண்டும். நிகழ்நிலை ஊடாக (Online) விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது, பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் நகரம் மற்றும் அதற்குரிய நகர இலக்கம் ஆகியவற்றை அட்டவணை - II இன் அடிப்படையில் சரியாகக் குறிப்பிட வேண்டும்.

02. மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க, பரீட்சை ஆணையாளார் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய, திறமை அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இன் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மத்திய மாகாணத்திலுள்ள எந்தவொரு சேவை நிலையத்திலும் சேவையாற்ற கடமைப்பட்டுள்ளனர்.

03. (அ) நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை **242** ஆகும்.

(ஆ) நியமிக்கப்படவுள்ள எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

**குறிப்பு:** இவ் ஆட்சேர்ப்பின் மூலம் அதிக வெற்றிட சதவீதம் நிலவும் மத்திய மாகாண சபையின் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதுடன், இப்போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நியமனம் பெறத் தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் இணைக்கப்படும் சேவை இடத்தில் கடமைக்குச் சமூகமளிக்கப் பிணைக்கப்பட்டவர்களாவர். நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னர், இணைக்கப்பட்ட சேவை இடத்தை மாற்றம் செய்வதற்காகச் செய்யப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

(இ) அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.06.30 ஆந் திகதிய 1869/4 ஆம் இலக்க அதிவிசட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகளுக்கும் மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தத்திற்கும், இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் மற்றும் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச சேவை ஆணைக்குழுச் செயலொழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு உட்பட்டு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

(ஈ) முதல் நியமனம் கிடைக்கப்பெற்ற சேவை நிலையத்தில் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும். எவ்வாறாயினும், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் யாதேனும் விசேட காரணங்கள் காரணமாக அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாதேனும் ஓர் உத்தியோகத்தரை இடமாற்ற வேண்டியேற்படின், அதற்கான உரிமை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

(உ) இந் நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதி ஒன்றுக்கு உட்பட்டது. மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(ஊ) நியமனத்திற்காக தெரிவு செய்யப்படின் நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமையை பூர்த்தி செய்த மொழியின் அடிப்படையில், 2020.10.16 ஆம் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இணைந்த வகையிலான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி குறித்துரைக்கப்பட்ட அரசாங்க கருமமொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

04. 2025.03.25 ஆம் திகதிய இல. 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் சம்பள குறியீடு MN 02-2025 இவ் பதவிக்கு உரித்தாவதுடன் அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 48,470 - 10x540 - 11x630 - 10x1,010 - 10x1,190 – ரூபா 82,800.00 என்பதுடன் அச்சம்பள அளவுத்திட்டத்துக்கு 2027.01.01 ஆம் திகதியிலிருந்து உரித்துடையவர்களாவீர்கள் நியமனம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து உங்களுக்கு இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

05. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் உரித்துடையதுமாகும். இப்பரீட்சையின் அடிப்படையின் மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு கட்டுப்பட வேண்டும்.

06. **தகைமைகள் :**

மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் மத்திய மாகாணத்தில் நிரந்த வதிவுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க 2008.10.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.10.16 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்).

(இ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர் தண்டனைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) கீழ் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகளைப் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(i). கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில், மொழி (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்) மற்றும் கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அதற்கு சமமானதாக அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை ஒன்றில் அதற்கு சமமான பாடத்தேர்ச்சியுடன் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

(கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டிய மொழியாக கருதப்படுவது விண்ணப்பதாரர் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலமாகும்.)

அத்துடன்

isharaiz.com

(ii). கல்விப்பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.) அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அதற்கு சமமானதாக அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை ஒன்றில் அதற்கு சமமான பாடத்தேர்ச்சியுடன் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

**கவனத்திற்கு : ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும் 2026.10.16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.**

isharaz.com

07. மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்தல்.

மாவட்டப் பெயர்ப் பட்டியல், அட்டவணை - I இல் காட்டப்பட்டுள்ளது. வெற்றிடங்களுக்குப் போட்டியிடுவதற்குத் தெரிவு செய்யும் மாவட்டம் மற்றும் அதன் இலக்கம் என்பவற்றை அட்டவணை - I இற்கு இணங்க நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தில் சரியாகக் குறிப்பிட வேண்டும்.

(அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மத்திய மாகாணத்திற்குரிய ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் சனத்தொகை விகிதாசாரத்திற்கு அமைய அந்தந்த மாவட்டத்திற்காக, வெற்றிட எண்ணிக்கையிலிருந்து குறிப்பிட்ட ஒரு தொகை ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து நிரப்ப வேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அம்மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே போட்டியிட முடியும். வெற்றிடங்கள் நிரப்படும் முறைத் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

I. மத்திய மாகாணத்தின் யாதேனும் ஒரு மாவட்டத்திற்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை அக்குறித்த மாவட்டத்திற்கு விண்ணப்பித்துள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளினால் நிரப்பப்பட முடியாவிடின், அவ்வெற்றிட எண்ணிக்கை மத்திய மாகாணத்தின் ஏனைய 02 மாவட்டங்களின் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் மீளப் பகிரப்படும்.

II. நிரப்பப்படவுள்ள மொத்த வெற்றிட எண்ணிக்கை சிறிய எண்ணிக்கையாக இருப்பின், அக்காரணத்தின் அடிப்படையில் மாவட்ட சனத்தொகை எண்ணிக்கையை அடிப்படையாக கொள்ள முடியாதவிடத்து திறமை ஒழுங்கின்படி தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவர்

III. பரீட்சையில் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றவர்களின் எண்ணிக்கையானது நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையிலும் பார்க்க குறைவாக காணப்படுமிடத்து மாவட்ட சனத்தொகை எண்ணிக்கை அடிப்படையில் ஆட்சேர்ப்பிற்காக தெரிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

**கவனத்திற்கு :** மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பதன் பொருள், மத்திய மாகாணத்திற்குரிய அந்நிர்வாக மாவட்டத்தின் சனத்தொகை விகிதாசாரமாக அம்மாவட்டத்தில் போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பதுடன், அந்நிர்வாக மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்களில் காணப்படும் சேவை வெற்றிடங்களின் எண்ணிக்கையல்ல என்பதனை கவனத்திற் கொள்ளவும்.

(ஆ) மத்திய மாகாணத்திற்குரிய மாவட்டத்திற்க்கு உரியவராக இருப்பதற்கான தகைமைகள்::

பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு உடன் முந்திய ஐந்து (05) வருட காலத்தில் விண்ணப்பதாரர் அந்த மாவட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் மூன்று (03) வருடங்களாவது தொடர்ச்சியாக நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்;

**குறிப்பு** -

1. எழுத்துமூலப் பரீட்சையிலிருந்து தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியின் வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கென நேர்முகப் பரீட்சையில் அல்லது கேட்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்குறித்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை நிரூபிக்கும் வகையில் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு அவர் கட்டுப்பட்டவராவர்.

   I. பிறப்புச் சான்றிதழ்
   II. கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் மற்றும் மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான வதிவை உறுதிப்படுத்தும் வாக்காளர் இடாப்புப் பெயர்ப் பட்டியல்
   III. மாணவர் செயலாற்றுகைப் படிவம்

2. எந்தவொரு விண்ணப்பதாரரும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களின் பதவி வெற்றிடங்களுக்காகப் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். நிகழ்நிலை விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் போது மேற்படி 07(ஆ) குறிப்பிடப்படும் தகைமைகளின்படி தாம் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு மாவட்டத்தினை தெரிவு செய்ததன் பின்னர் அதனை மாற்ற முடியாது.

08. நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் 3% வீதம் அங்கவீனமுடைய நபர்களுக்காக (மாற்றுத்திறனாளிகளுக்கு) ஒதுக்கப்படும். பரீட்சையில் கூடிய புள்ளி மட்டத்தை அடைந்து தகைமை பெறுகின்ற 3% வீதமான அங்கவீனமுடைய நபர்கள் (மாற்றுத்திறனாளிகள்) மாத்திரம் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர். அதற்காக தகைமைப் பெறுவதற்கு பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் நூற்றுக்கு நாற்பது வீதம் புள்ளிகளைப் (40%) பரீட்சாத்திகள் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் குறைந்த பட்சம் 50% வீதமாவது இருத்தல் வேண்டும். அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 27/88 இன் அங்கவீனமுடையவர்கள் (மாற்றுத்திறனாளிகள்) அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

அங்கவீனமுடைய (மாற்றுத்திறனாளிகள்) நபர்களுக்காக ஒதுக்கப்படும். வெற்றிடங்களிற்காக விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தகைமைப் பெறும் விண்ணப்பதாரர்கள், தகைமைகளைப் பரிசீலிக்கும் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு மேலதிகமாக விசேட மருத்துவ பரிசோதனைக் குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்படுவர். அத்துடன் மருத்துவ பரிசோதனைக் குழுவினால் அங்கவீனர் அற்றவர் அல்லது அங்கவீனத்தின் அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவர் என பரிந்துரைக்கப்படும் விண்ணப்பதாரர் நியமனம்பெற தகைமைப் பெறமாட்டார் என்பதனைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு** : இப்பரீட்சைக்குப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 27/88 இன் ஏற்புகளுக்கு அமைவாகச் சிறப்புத் தேவைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் ஒருவர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் சிறப்பு வசதி வழங்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர் ஒருவர் விண்ணப்பிக்கும் பட்சத்தில், அது பற்றி நிகழ்நிலை ஊடாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது கட்டாயமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். அத்துடன், அதற்குரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். **அங்கவீனம் அல்லாத ஒருவர் பொய்யான முறையில் அங்கவீனர் என குறிப்பிடலாகாது.**

09. பரீட்சைத் திட்டம்

(அ) இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| | பாடம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| 01 | மொழியாற்றல் | 100 | 02 ½ மணித்தியாலங்கள் |
| 02 | உளச்சார்பு | 100 | 01 மணித்தியாலம் |

(01) மொழியாற்றல் :

பரீட்சார்த்திகள் கருத்துக்களை வெளிப்படுத்தல், கிரகித்தல், எழுத்துப் பிரயோகம், மொழி மற்றும் கட்டுரை, கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல், கொடுக்கப்படும் பந்திகளைச் சுருக்கி எழுதுதல், சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல், எளிய இலக்கண விதிகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றில் பரீட்சார்த்தியின் திறனைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்களுடன் தொடர்புபட்ட பாடத்தினை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(02) உளச்சார்பு :

பரீட்சார்த்தியின் எண்கள் தொடர்பான திறன்கள், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பொது விவேகம் ஆகியவற்றைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்கள் தொடர்பான பாடங்களை இவ் வினாத்தாள் உள்ளடக்கும். இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கிய 50 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

isharaiz.com

**குறிப்பு** : கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும்.

(ஆ) இப்போட்டிப் பரீட்சையில் தகைமையைப் பெறுவதற்கு விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% வீதத்தையாவது பெறுவதுடன் பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50% வீதத்தை கட்டாயமாக பெற்றிருத்தல் வேண்டும். பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு, போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை பூர்த்தி செய்யக்கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

(இ) பரீட்சைப் பெறுபேறுகள் - மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டிற்கு அமைவாக, எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள்/ மொத்தப் புள்ளிகளைக் குறிப்பிட்ட பெறுபேற்றுப் பட்டியலை, பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலமாக அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக வெளியிடுவதற்கோ இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

10. பொய்யான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனைகள் :-

i. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாகவும், சரியாகவும் தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பதாரர் உரிமையை இரத்துச் செய்ய முடியும்.

ii. விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று பொய்யானவை என்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அல்லது அவர் வேண்டுமென்றே ஏதேனும் விடயத்தினை மறைத்துள்ளார் என பின்னர் தெரியவரும் போது அவருக்கு தொடர்ந்தும் நியமனம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாதது என்பதுடன் இப் பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள நியமனமொன்றினை இரத்துச் செய்வதற்கு அல்லது அரசாங்க சேவையிலிருந்து அவரை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. பரீட்சை நிபந்தனைகள் :

(i) நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பு பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரித்துள்ள பொது அறிவுறுத்தல் பத்திரத்தினை (Common Instructions) தரவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை கண்டிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையினூடாக சமர்ப்பிக்கப்படும் மென்பிரதியை செல்லுபடியான பிரதியொன்றாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் ஏற்கப்பட்டதாக/ ஏற்கப்படவில்லையென கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அறிவிக்கப்படும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையினூடாக வழங்கப்படும் கீழ்குறிப்பிட்டுள்ள கட்டணம் செலுத்தும் முறையின் மூலம் மாத்திரம் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(i) எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
(ii) எந்தவொரு வங்கியினதும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card)
(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் மூலம்/ Flex செயலி மூலம் (Bank of Ceylon Online Banking Method/ Flex App)
(iv) எந்தவொரு இலங்கை வங்கியின் கிளைகளினூடாகவும் (Bank of Ceylon Teller Slip Payment)

**குறிப்பு** : மேற்குறிப்பிடப்பட்டுள்ள முறைமையின் ஊடாக கட்டணம் செலுத்த வேண்டிய முறைத் தொடர்பில் அறிவுறுத்தல்கள் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் **www.doenets.lk** இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் எனும் பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது.

islarau.com

(iii) கட்டணம் கிடைக்கப் பெற்றமைத் தொடர்பில் குறுந்தகவலொன்றின் (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் (Email) மூலமாகவோ அறியத்தரப்படும். பரீட்சைக்கான முழுக் கட்டணமும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சைக் கட்டணத்தினைக் குறைவாகவோ அல்லேது கூடுதலாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்தும் முறையின் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படும் பிழைகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சை திணைக்களம் அல்லது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது.

isharatz.com

(iv) செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக்காகவும் மாற்றப்படவும் மாட்டாது.

(v) விண்ணப்பதாரிகள், விண்ணப்பங்களை சமர்ப்பிக்க இறுதி திகதி வரையில் தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு எதிர்மறை விளைவுகளையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் அனுமானத்திற்கு அமைய, விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தினை நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிற்கு பரீட்சை ஆணையாளரினால் நிகழ்நிலையினூடாக மாத்திரம் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும்.

(vii) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட உடன் அது தொடர்பான அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் **www.donets.lk** உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும்/ விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ் செய்தியினூடாக **(SMS)** அறிவிக்கப்படும். தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தியொருவர் இருப்பின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாளை அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினை சரியாகக் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதியினையும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பதும் பிரயோசனமானது.

(viii) அனுமதிப்பத்திரத்தினைப் பரீட்சித்து அதில் ஏதேனும் திருத்தங்கள் செய்யத் தேவைப்படின், முன்னதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினைத் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கமைய அத்திருத்தங்களை செய்துக் கொள்ளல் வேண்டும். பரீட்சை நிலையத்தில்/ நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு முன்வைக்கும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ix) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால், ஏனைய விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் / ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தரினால், பிரிவின் கிராம உத்தியோகத்தரினால், சமாதான நீதவானால், சத்தியப்பிரமாண ஆணையாளரினால், சட்டத்தரணியால், பிரசித்த நொத்தாரிசினால், முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பௌத்தமத விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை மத குருவினால் அல்லது வேறு மத ஸ்தலத்திற்கு பொறுப்பாகவுள்ள அல்லது மத குருவாக குறிப்பிட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையையுடைய ஒருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(x) பரீட்சை நடத்தல் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுகுதல் வேண்டும். அவ்வாறான சட்டதிட்டங்களை மீறும் பரீட்சார்த்திக்கெதிராக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி ஆளாக வேண்டி ஏற்படும். பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

12. பரீட்சைக்கு அனுமதித்தல் :

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் பரீட்சைத் தினத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய சட்டவிதிமுறைகள் இவ்வறிவித்தலில் வெளியிடப்படுகின்றது.

குறிப்பு :- பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது.

13. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும் :

(அ) தேசிய ஆளடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்கள் ஏதும் பாவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

14. இவ் ஒழுங்குவிதிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏனைய அனைத்து விடயங்கள் சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

15. இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்

திரு. கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக,
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை

2026 செப்டம்பர் 14 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
இல. 244, கடுகஸ்தொட்டை வீதி,
கண்டி

isharaiz.com

isharaiz.com

## அட்டவணை - I
## மாவட்டங்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் இலக்கங்கள்

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |

## அட்டவணை - II
## பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள்

| *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|
| 04 கண்டி | கண்டி | 32 |
| | கட்டுகஸ்தோட்டை | 33 |
| | தெல்தெனிய | 34 |
| | வத்தேகம | 35 |
| | நுகவெல | 36 |
| | கலகெதர | 37 |
| | கம்பளை | 38 |
| 05 மாத்தளை | மாத்தளை | 28 |
| | கலேவலை | 29 |
| | நாஉல | 30 |
| | லக்கல - பல்லேகம | 31 |
| 06 நுவரெலியா | ஹந்துனுவெவ | 39 |
| | நுவரெலியா | 40 |
| | வதுமுல்லை | 41 |
| | ஹட்டன் | 42 |
| | கினிகத்ஹேனை | 43 |